[1973 நவம்பர் 20

திரு. சு. துரைசாமி: கோவையிலிருந்து நிறையப் பேர் சென்னைக்கு வரவேண்டிய அவசியம் இருக்கிறது. இப்போதுள்ள வண்டிகள் இரவு நேரங்களில் வரும் வண்டிகள் கோவையிலிருந்து இங்கு வந்து வேலைகளை முடித்துச் செல்ல துரித வண்டி அமைப்பது தேவை என்று நம்முடைய மாநில அரசு மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மத்திய அரசுக்கு மாநில அரசு சிபாரிசு செய்திருக்கிறதா என்று கேட்டதற்கு இல்லை என்று சொன்னேன். கன்சல்டேட்டிவ் கமிட்டியில் இதுபற்றி விவாதிக்கப்பட்டு திரு. ஏ. என். நாயக் அவர்கள் கோவைக்கும் சென்னைக்கும் இடையே சூபர் எக்ஸ்பிரஸ் விடலாம் என்ற யோசனையைச் சொல்லியிருக்கிறார்கள். அதுபற்றிப் பரிசீலனை செய்து கொண்டிருப்பதாகவும் தகவல் வந்திருக்கிறது.

இரட்டை இரயில் பாதைகள்.

*217—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் முக்கிய இரயில் பாதைகளில் இரட்டை இரயில் பாதை அமைக்கக் கோரி அண்மையில் நமது அரசு மத்திய அரசினை வலியுறுத்தி உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

திரு. என். கிட்டப்பா: நமது அரசு இதுவரை வலியுறுத்தவில்லை என்றாலும் தமிழகத்தைப் பொறுத்தவரை இரட்டை ரெயில் பாதைகள் அமைப்பதற்கு மத்திய அரசு ஏதேனும் திட்டம் வைத்திருக்கிறதா? நம்முடைய அரசுக்கு அதுபற்றிய முழு விவரம் தெரியுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இரட்டை ரயில் பாதை வேலை முடிவுற்றவை—திருவொற்றியூர்—கூடூர்; அரக்கோணம்—ரேணிகுண்டா; அரக்கோணம்—சோலையாறு; சோலையாறு—ஈரோடு; போத்தனூர்—மதுக்கரை ஆகியவை. இரட்டை ரயில் பாதை போடும் பணி நடந்து கொண்டிருப்பது—ஈரோடு—ஊத்துக்குழி; ஊத்துக்குழி—இருகூர்.